

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி எல்லாபுரம் ஒன்றியம் செங்கரை, கூளைமேனி, தண்டலம், வண்ணாங்குப்பம், தும்பாக்கம், தொளவேடு ஊராட்சிகளில் உங்களுடன் ஸ்டாலின் முகாமை துவக்கி வைத்து மக்களின் கோரிக்கை மனுக்களை பதிவு செய்யும் செயல்முறை நேரில் பார்வையிட்டு மனுதாரர்களுடன் நேரடியாக உரையாடி துறை சார்ந்த அதிகாரிகளுடன் இணைத்து பொதுமக்களின் தேவைகளுக்கு உடனடி நிவாரணம் வழங்குமாறு முன்னாள் மாவட்ட செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் வேண்டுகோள் விடுத்தார். உடன் ஜெ.மூர்த்தி, எ.வி. ராமமூர்த்தி, எஸ்.ரமேஷ், பா.தனசேகரன், ஜெயாலலிதாசசிதரன், மு. பாஸ்கர், எஸ்.ராமஜெயம், என்.எஸ்.ராஜா, வழக்கறிஞர்கள் முனுசாமி, சீனிவாசன், டி.சங்கர், டி.ரவி, சுமன், கே.வி.நாகராஜ், சிவாஜி, ஐ.ராஜா, டில்லி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் .





முதலமைச்சர் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, சென்னை மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–11, வார்டு–152, வளசரவாக்கம், மண்டலம்–11, மண்டல அலுவலகத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாம் நிகழ்ச்சியில் நேற்று 28.08.2025 மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ., கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி பார்வையிட்டு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் உள்ளிட்ட பொது மக்களின் பல்வேறு கோரிக்கைகளுக்கு தீர்வு காணும் வகையில் சம்மந்தப்பட்ட துறையினரிடம் உரிய முறையில் பரிசீலனை செய்து சேவைகளை பயனாளிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்வில் மண்டலம்–11, மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன்,எம்.சி., பகுதி கழக நிர்வாகிகள் இரா.பால்பாண்டியன், எஸ்.பாரதி, எம்.சி., வட்ட கழக செயலாளர்கள் ஜெ.பாஸ்கரன் (பொறுப்பாளர்), த.ரமேஷ், எஸ். ரமேஷ்ராஜ், மாமன்ற உறுப்பினர்கள் செல்வி ரமேஷ்,எம்.சி. ஹேமலதா கணபதி,எம்.சி. சாந்தி ராமலிங்கம், எம்.சி. மற்றும் கழக நிர்வாகிகள், அரசுத் துறை அதிகாரிகள், பொது மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இந்தியாவிலேயே கல்வியிலும், மருத்துவத் துறையிலும் அனைத்து மாநில முதல்வர்களும் பொறாமைப்படும் அளவில்

# பொற்கால ஆட்சியை நடத்திவருபவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பெருமிதம்!

திருவள்ளூர் ஆக 29;

திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் ஒன்றியத்துக் குட்பட்ட கீழச்சேரியில் திரு இருதய ஆண்டவர் அரசு உதவி பெரும் பெண்கள் மேல் நிலைப்பள்ளியின் 150 ஆண்டு விழா விளையாட்டு போட்டிகள் தொடக்கவிழா நடைபெற்றது. இந்த விழாவில் சிறுபான்மை நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் கலந்து கொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்து விளையாட்டு ஜோதியை ஏற்றிவைத்து தேர்வுகளில் அதிக மதிப்பெண் எடுத்த மாணவியருக்கு தனது சொந்த செலவில் நிதி உதவிகளை வழங்கினார் .பின்னர் சிறப்பாக செயல் பட்ட அணிகளுக்கு பரிசு கோப்பைக்ளை வழங்கினார்.

அப்போது பேசிய அமைச்சர் ஆவடி நாசர் இந்தியவில் கல்வித்துறை மற்றும் மருத்துவத்துறையில் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி எல்லா மாநில முதல்வர்களும் பொறாமைப்படும் அளவிற்கு, பெருமைப்படும் அளவிற்கு ஒரு பொற்கால ஆட்சியை நடத்தி வரும் ஒரே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஒருவர் தான் என்றார்.ஒன்றிய அரசு மும்மொழிக் கொள்கையை ஏற்றால் தான் கல்வி நிதி 2000 கோடியை ஒதுக்க முடியும் என நிறுத்தி வைத்துள்ளது.ஆனாலும் இரு மொழிக்கொள்கையே போதும்,வருங்கால சந்ததிகளுக்கு துரோகம் இழைக்க முடியாது என கூறி இரு மொழிக் கொள்கையே போதும் என கூறி தமிழ் நாடு கல்விக்கென சுமார் 45 ஆயிரம் கோடியை ஒதுக்கிய ஒரே முதல்வர் நம் முதல்வர் ஒருவர்தான்.



மாணவிகள் அனைவரும் தமிழ் மொழியை நேசித்து இந்த மண்ணில் வேறு ஒரு மொழி ஆதிக்கத்திற்கு எதிர்த்து நிற்க வேண்டும் என்றார்.

இந்த விழாவில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர் வி.சி.ஆர்.குமரன், ஒன்றிய செயலாளர்கள் மோ. ரமேஷ், எஸ்.மகாலிங்கம், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தேவிகால, ஒன்றிய பொருளாளர் ஆ. தேவா, மற்றும் கோபால், ரவி, காஞ்சிபடி சரவணன், கே.பி.எஸ்.கார்த்திக், உட்பட பள்ளி ஆசிரியர்கள், ஏறாளமான மாணவ,மாணவியர் கலந்து கொண்டனர்.

அமெரிக்கா விதித்த 50 சதவிகித வரியால்

# திருப்பூர் ஆயத்த ஆடை ஏற்றுமதியாளர்களுக்கு ரூ.3 ஆயிரம் கோடி வர்த்தகம் பாதிப்பு!

## ஏற்றுமதியாளர்கள் சங்க தலைவர் கே.எம்.சுப்பிரமணியன் தகவல்!

திருப்பூர், ஆக. 29-

அமெரிக்கா விதித்த 50 சதவீத வரியால் திருப்பூர் ஆயத்த ஆடை ஏற்றுமதியாளர்களுக்கு ரூ.3 ஆயிரம் கோடி வர்த்தக பாதிப்பு ஏற்படும் என்று திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்க தலைவர் கே.எம்.சுப்பிரமணியன் கூறினார்.

50 சதவீத வரி அமல் :- இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 50 சதவீத வரியை அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் விதித்தார். இந்த வரி இரண்டு நாட்களுக்கு முன்பு அமலுக்கு வந்தது. இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு ஆயத்த ஆடைகள் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. டிரம்ப் விதித்த 50 சதவீத வரி விதிப்பு காரணமாக ஆயத்த ஆடை வர்த்தகம் பெரும் பாதிப்பை சந்தித்துள்ளது. இந்திய ஆயத்த ஆடை ஏற்றுமதியில் 68 சதவீத பங்களிப்பை திருப்பூர் மேற்கொண்டுள்ளது.

ரூ.12 ஆயிரம் கோடி வர்த்தகம் :- ஆயத்த ஆடை ஏற்றுமதி வர்த்தகம் திருப்பூரில் ஆண்டுக்கு ரூ.45 ஆயிரம் கோடிக்கு நடக்கிறது. இதில் அமெரிக்காவுக்கு மட்டும் ரூ.12 ஆயிரம் கோடி வர்த்தகம் நடைபெற்று வருகிறது. அமெரிக்கா அறிவித்த 50 சதவீத வரி காரணமாக கடந்த 20 நாட்களாக இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் ஆயத்த ஆடைகளை திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் நிறுத்தி வைத்திருந்தனர். அமெரிக்கா ஜனாதிபதி அறிவித்த 50 சதவீத வரி அமலுக்கு வந்ததால் திருப்பூர் ஆயத்த ஆடை ஏற்றுமதியாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

**ரூ.3 ஆயிரம் கோடி வர்த்தகம் பாதிப்பு!**

இதுகுறித்து திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்க தலைவர் கே.எம்.சுப்பிர மணியன் கூறியதாவது :- திருப்பூரிலிருந்து அமெரிக்காவுக்கு ஆண்டுக்கு ரூ.12 ஆயிரம் கோடி ஆயத்த ஆடை ஏற்றுமதி நடந்து வருகிறது. 50 சதவீத வரி அமலுக்கு வந்ததால் அமெரிக்காவுடன் 30 சதவீத பாதிப்பு ஏற்படும் சூழல் எழுந்துள்ளது. அப்படி பார்த்தால் இன்னும் 4 மாதங்களுக்கு ஆயத்த ஆடை ஏற்றுமதி வர்த்தகம் தேகத்தை சந்திக்கும்.

ரூ. 3 ஆயிரம் கோடி வர்த்தக பாதிப்பு ஏற்படும் வாய்ப்புள்ளது. ஆனால் இந்த வர்த்தகம் பாதிப்பை சமாளிக்கும் வகையில் இங்கிலாந்துடன் வரியில்லா வர்த்தக ஒப்பந்தம் அமைந்துள்ளது. ஐரோப்பிய நாடுகளுடன் வரியில்லா வர்த்தகம் ஒப்பந்தம் இருப்பதால் அமெரிக்காவுடன் ஏற்படும் வர்த்தக இழப்பை இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வர்த்தக இழப்பை சமாளிக்க முடியும்.

5 சதவீதம் குறைப்பு :- 50 சதவீத வரி விதிப்பு இரண்டு நாட்களுக்கு முன்பு அமலாகி உள்ளது. அமெரிக்க மக்களுக்கு தான் இந்த 50 சதவீத வரி பாதிப்பு ஏற்படும். உதாரணமாக இதுவரை ரூ.100-க்கு ஆடையை வாங்கியவர்கள், இனி ரூ.150- க்கு வாங்க கூடிய நிலை உருவாகியுள்ளது. கடந்த சில நாட்களாக கொச்சி, மும்பை, தூத்துக்குடி துறைமுகங்களில் ஆயத்த ஆடை அமெரிக்காவுக்கு அனுப்பி வைப்பது நிறுத்தம் செய்யப்பட்டிருந்தது. தற்போது அங்குள்ள பையர்கள், தங்களுக்கு குறைந்த விலையில் ஆடைகளை தயாரித்து கொடுக்கும்படி திருப்பூர் ஏற்றுமதியாளர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி உள்ளனர். எங்களுடைய லாபத் தொகையில் இருந்து 5 சதவீதம் குறைத்து ஆர்டர்களை பெற தொடங்கியுள்ளோம். லாபம் குறைவு என்றாலும் வர்த்தக வாய்ப்புகளை கைவிட முடியாமல் அமெரிக்காவுக்கு வர்த்தகம் செய்து வருகிறோம். வர்த்தக வாய்ப்புகள் குறையும் போது திருப்பூரில் தொழிலாளர்களுக்கு வேலை இழப்பை சமாளிக்கும் வகையில் மற்ற நாடுகளுடன் ஏற்றுமதி வர்த்தகத்தை செய்து வேலை இழப்பு இல்லாமல் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.

ஒன்றிய அரசு சலுகைகள் :- ஒன்றிய அரசு திருப்பூர் ஆயத்த ஆடை ஏற்றுமதியாளர்களுக்கு சலுகைகளை வழங்கி ஊக்குவிக்க வேண்டும். குறிப்பாக டியூட்டி டிராபேக் சதவீதத்தை அதிகரிக்க வேண்டும். தொழில் கடனுக்கான வட்டி மானியத்தை உயர்த்த வேண்டும். கொரோனா காலத்தில் வழங்கப்பட்டது போல், அவசர கால கடன் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளோம். ஒன்றிய அரசு அதை பரிசீலித்து ஏற்றுமதியாளர்களுக்கு உதவ வேண்டும். என்று கோரிக்கை வைக்கிறோம் என்று அவர் கூறினார்.



தாம்பரம் மாநகர வர்த்தக அணியின் துணை செயலாளரும் முன்னாள் நகர மன்ற உறுப்பினருமான இரா செல்வகுமார் அவர்களின் பேரன் மணமகன் டாக்டர் எஸ்.குற்றாலிஸ்வரனுக்கும் மணமகள் டி.ஹனிதா தேவி ஆகியோரின் திருமணம் பாழைய வண்ணாரபேட்டை எம்.சி. ரோட்டில் அமைந்துள்ள ஸ்ரீ காமாட்சி அம்மன் கோவிலில் நடந்த திருமண விழாவில் ராயபுரம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் கழக தலைமை செயற்குழு உறுப்பினருமான ஐட்ரிம்ஸ் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ., கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் முன்னாள் நகர மன்ற உறுப்பினர்கள் எஸ்,சுரேஷ், சசிதேவி சுரேஷ், மாநகர தொழிலாளர்கள் அணியின் துணை அமைப்பாளர் எஸ்.மகேஷ்,பெருங்களத்தூர் வடக்கு பகுதியின் தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் எஸ்.பிரகாஷ்,மற்றும் கழக நிர்வாகிகளும் உற்றாரும் உறவினர்களும் பெரும் திரளாக கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 190 வது நாள்

## கொளத்தூர் கிழக்குப் பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை,அக.29-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 190 ஆம் நாளான - கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (28.08.2025), கொளத்தூர் கிழக்கு பகுதி: 1) 70வது வட்டம் SSV கோயில் இரண்டாவது தெரு, பெரம்பூர். 2) 67அ வட்டம், திரு.வி .க நகர் பஸ் நிலையம் அருகில், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!”





என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம், துரைகண்ணன், ம.அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக், எஸ்.தனசேகர், டி.யோகப்பிரியா, என்.தாவூத் பீ, பி.அமுதா, சி.ஸ்ரீதணி, வட்ட கழக செயலாளர்கள்: பி.ஊமைத்துரை, கே.பி.ஆதவன்மணி, என். பொன்முடி, கே.ஜார்ஜ்குமார், பி.டி. சி.எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திரசே கர், எஸ்.முருகன், எம்.பி.தமிழ்ச்செல்வன், என்.சௌந்தர், என். பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி. ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, ஆர்.ராஜன், கே.ஆர்அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார், அன்பரசன், ஆதவன் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

தொழில் முனைவோர் மேம்பாடு – புத்தாக்க நிறுவனம் நடத்தும்

9 நாட்கள் – தொழில்முனைவோர் திறன் மேம்பாட்டு பயிற்சியில் –

# சூரிய சக்திதொழில்முனைவோர்குறித்தப்பயிற்சி!

சென்னை, ஆக. 29 -

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னையில், 9 நாட்கள் தொழில்முனைவோர் திறன் மேம்பாட்டுத் பயிற்சியில் சூரிய சக்தி தொழில் முனைவோர்” குறித்த பயிற்சி வரும் 08.09.2025 முதல் 16.09.2025 தேதி வரை காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் சூரிய சக்தி துறையில் தொழில்முனைவோரின் அடிப்படைகள், நுண் ஆய்வகம், சூரிய சக்தியில் தொழில் முனைவோரின் முக்கியத்துவம், ஒரு தொழில் முனைவோரின் பண்புகள், தொழில்முனைவோர் உந்துதல் சுய பகுப்பாய்வு, நிறுவன மேம்பாட்டிற்கான இடர் எடுப்பு மற்றும் இலக்கு நிர்ணய நடத்தையைப் புரிந்துகொள்வது, வணிக வாய்ப்பு அடையாளம் காணல், சூரிய சக்தியின் அடிப்படை, சூரிய கூறுகள் மற்றும் அமைப்பு வடிவமைப்பு, சந்தை கணக்கெடுப்பின் கண்ணோட்டம், தொழில்முனைவோர் ஆதரவு சுற்றுச்சூழல் அமைப்பு, சூரிய ஆற்றல் துறையைச் சேர்ந்த வெற்றிகரமான தொழில்முனைவோருடன் தொடர்பு, நிதி எழுத்தறிவு, சட்ட நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பது, சூரிய கூரை முயற்சிக்கான வணிகத் திட்டத்தை உருவாக்குதல், சந்தை பகுப்பாய்வு மற்றும் விலை நிர்ணய உத்திகள்.

தொழில்முனைவோருக்கான சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை உத்திகள்: இலக்கு வாடிக்கையாளர்கள் மற்றும் பயனுள்ள சந்தைப்படுத்தல் சேனல்களை அடையாளம் காணுதல். டிஜிட்டல் சந்தைப்படுத்தல், சூரிய PV கூறுகளின் கண்ணோட்டம், சூரிய PV அமைப்பை வடிவமைத்தல்: வடிவமைப்பு மென்பொருளைப் பயன்படுத்தி நடைமுறை பயிற்சிகள். அமைப்பு மற்றும் வயரிங் பரிசீலனைகள். வங்கி நடைமுறை மற்றும் முறைகள், சட்ட மற்றும் ஒழுங்குமுறை பரிசீலனைகள்: உரிமம் வழங்குதல், அனுமதிகள் மற்றும் காப்பீடு, வணிக தொடர்பு திறன்கள், கட்ட இணைப்பு செயல்முறை: பயன்பாட்டுத் தேவைகள் மற்றும் ஒழுங்குமுறைகளைப் புரிந்து கொள்வது. வெற்றிகரமான மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட சூரிய சக்தி திட்டங்களின் வழக்கு ஆய்வுகள், வேலைவாய்ப்புத் திறன்கள், நிறுவன மேலாண்மை, நிறுவனங்களுக்கான பதிவு, உதயம் பதிவு நிதி திட்டமிடல் போன்றவை வழிமுறைகள் ஆகியன கற்றுத்தரப்படும், அரசு வழங்கும் உதவிகள் மற்றும் மானியங்கள் ஆகியவையும் விளக்கப்படும்.

இப்பயிற்சியில் ஆர்வமுள்ள தொழில்முனைவோர் (ஆண்/பெண்) 18 வயதுக்கு மேற்பட்ட குறைந்தபட்ச கல்வித் தகுதி 10வது வகுப்புடன் விண்ணப்பிக்கலாம். இப்பயிற்சியில் பங்குபெறும் பயனாளிகளுக்கு குறைந்த வாடகையில் தங்கும் விடுதி உள்ளது தேவைப்படுவோர் இதற்கு விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் www.editn.in என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண்கள்.

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, இடிஐஐ அலுவலக சாலை ஈக்காட்டுத்தாங்கல், சென்னை - 600 032. 8668102600 / 7010143022. இப்பயிற்சியில் 30 இருக்கைகள் மட்டுமே அனுமதிக்கப்படு கின்றன, முதலில் முன்பதிவு செய்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.” முன்பதிவின் கடைசி தேதி: 05.09.2025 அரசு சான்றிதழ் வழங்கப்படும்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



திருநெல்வேலியைச் சேர்ந்த செல்லத்துரையின் மகனாகிய ஜவஹர் சுமன், கடந்த 10 ஆண்டுகளாக சவூதி அரேபியாவின் ஜுபைலில் பணிபுரிந்து வந்தார். அங்கே மின்சாரம் தாக்கியதால் உயிரிழந்தார். இந்த துயரமான சம்பவத்துக்குப் பின்னர், இது தொடர்பான தகவல் NRTIA க்கு தெரிவிக்கப்பட்டது. அயலக அணி.தம்மாம் ஒருங்கிணைப்பாளரும் சிக்கந்தர் பாபு மற்றும் துணை ஒருங்கிணைப்பாளருமான குண்டு பிலால் ஆகியோர் உடனடியாக நடவடிக்கை எடுத்து, NRTIA இளைஞர் அணி செயலாளர் அஷ்ரப், பஹத் மற்றும் ஓட்டுநர் சங்க பொறுப்பாளர் முருக லிங்கம்,அப்துல் சத்தார், ஆகியோரின் ஒத்துழைப்பின் மூலம் தேவையான அனைத்து சட்ட நடவடிக்கைகள் தாமதமின்றி நிறைவேற்றப்பட்டு, ஜவஹர் சுமனின் உடல் திருவனந்தபுரத்திற்கு அனுப்பப்பட்டது.